Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 22, 2024

திங்கட்கிழமை ஏப்ரல் 22, 2024 | ஒளி: 09 கதிர் 235 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



‘Foxhill’ கார் பந்தய விபத்தில்

# 7 பேர் பலி



தியத்தலாவ - நரியகந்த, ‘Foxhill’ கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பந்தயம் ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்றது.

அதில் இடம்பெற்ற அனர்த்தத்தில் பந்தயத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ஏழுபேர் உயிரிழந்துள்ளனர்.

பந்தயத்தின் போது காரொன்று சுவட்டுப் பாதையில் புரண்டு விபத்துக்கு உள்ளானது. பின்னால் வந்துகொண்டிருந்த மற்றுமொரு கார், புரண்டிருந்த காரை மோதித்தள்ளியது. அந்தக் கார் பார்வையாளர்கள் பக்கத்துக்குப் பாய்ந்துசென்று பார்வையாளர்களை முட்டி மோதியதில், இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இதில், மேலும் 20 பேர் காயமடைந்து தியத்தலாவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தியத்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## “விஜயதாசவை ஏற்கோம்”

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளராக விஜயதாச ராஜபக்‌ஷவை நியமிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

கட்சியில் அங்கம் வகிக்காத ஒருவரை தற்காலிக தலைவராக நியமிப்பதற்கு சட்டரீதியாக சாத்தியமில்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## ஜே.வி.பியின் ஈஸ்டர் விசாரணை நகைப்புக்குரியது

ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்களின் தேசிய பட்டியல் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதாக ஜே.வி.பி உறுதியளித்துள்ளதை விடக் கேலிக்கூத்து ஒன்றும் இல்லை என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## இலங்கை அகதி ஒருவர் இந்தியாவில் வாக்களிப்பு

திருச்சி மாவட்டம் கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் 38 வயதான நளினி கிருபாகரன் என்ற பெண் பொதுத் தேர்தலில் முதன்முறையாக வாக்களித்துள்ளார்.

தொடர்ச்சி P2





### 5 வருட நிறைவு

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 5 வருட நினைவுதினம் ஞாயிற்றுக்கிழமை (21) அனுஷ்டிக்கப்பட்டது. நாடளாவிய ரீதியிலுள்ள தேவாலயங்களில் ஞாயிறு விசேட ஆராதனைக்குப் பின்னர், இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மட்டக்களப்பு, சீயோன் தேவாலயத்தில் உயிரிழந்தவர்களின் உறவுகள் மலர்களை வைத்து, மெழுகுவர்த்தி ஏற்றி, மௌன அஞ்சலி செலுத்தினர்.

## 2024 பட்ஜெட் வருமான இலக்கை எட்டத் தவறும்

2024ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 33ஆவது ஆண்டாக இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருமானம் தொடர்பான வரவு-செலவுத் திட்ட இலக்கை எட்டத் தவறிவிடும் என அண்மையில்

தொடர்ச்சி P2

VERITÉ RESEARCH

தொழிலாளர்களின் அடிப்படை சம்பளமாக

# “ரூ.1,700 தா”

### கம்பனிகளை வலியுறுத்தி, மலையகத்தில் கறுப்பு கொடியேந்தி ஆர்ப்பாட்டம்

■ மலையக நிருபர்கள்

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு, நாளொன்றுக்கான அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாயை வழங்குமாறு வலியுறுத்தியும், பெருந்தோட்டக் கம்பனிகளின் அராஜக போக்கைக் கண்டித்தும் மலையக நகரங்களில் ஞாயிற்றுக்கிழமை (21) போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டங்களுக்கு சிவில் அமைப்புகள் மற்றும் நகர வர்த்தகர்கள் தரப்பில் இருந்தும் பேராதரவு வழங்கப்பட்டது.

நகர்ப் பகுதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன். நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன், கொட்டகலை, டிக்கோயா, பொகவந்தலாவை, மஸ்கெலியா, டயகம, அக்கரப்பத்தனை, நானுஓயா, இராகலை உள்ளிட்ட நகரங்களில் இ.தொ.காவின் ஏற்பாட்டில் சம்பள உயர்வுக்கான அழுத்தம் கொடுக்கும் போராட்டங்கள் இடம்பெற்றன. பதுளை மாவட்டத்தில் பதுளை,










பசறை, ஹாலிஎல, ஹப்புத்தளை உள்ளிட்ட நகரங்களில் நடைபெற்றன.

கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி, புஸ்ஸல்லாவ, மடுல்கலை, உளுகங்கை, ரங்கல உள்ளிட்ட பகுதிகளிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பின்னவல, கஹாவத்தை, இறக்குவானை உள்ளிட்ட நகரங்களிலும், மாத்தளை நகரிலும் மற்றும் களுத்துறை மத்துகம பகுதியிலும், அவிசாவளை உள்ளிட்ட நகரங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன.

இ.தொ.காவின் அரசியல் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள், தொழிலாளர்கள், செயற்பாட்டாளர்கள் பலர் போராட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.

## “வேதன அதிகரிப்பை மேற்கொள்ளவும்”

### ஜனாதிபதியிடம் வடிவேல் சுரேஷ் வலியுறுத்து

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அழுத்தம் ஒன்றை பிரயோகித்து பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்,



தொடர்ச்சி P2

## 40,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

நாட்டில் உள்ள பாடசாலைகளில் மொத்தமாக 40,000 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேல், கிழக்கு, வடமத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இதன்படி, மேல் மாகாணத்தில் ஏறக்குறைய 7,000 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது கிழக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட 3,800 வெற்றிடங்களும், வடமத்திய மாகாணத்தில் 3,698 வெற்றிடங்களும், பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி P2



## குறைந்த வருமான குடும்பங்களுக்கு அரிசி

குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மாதாந்தம் தலா 10 கிலோ கிராம் அரிசி வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊவா பரணகம அபகஸ்தோவ விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குத் தேசிய அரிசி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்துள்ளார் அத்தோடு, குறைந்த வருமானம் பெறும் 28 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுவதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோஸ்த்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், ஏப்ரல் மாதம் வழங்கப்படவுள்ள 10 கிலோ கிராம் அரிசியானது நாடளாவிய ரீதியில் வழங்குவதற்கு ஏற்கெனவே ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# 2024 பட்ஜெட் வருமான இலக்கை எட்டத் தவறும்

வெளியிடப்பட்ட '2024 வரவு-செலவுத் திட்ட நிலை தொடர்பான அறிக்கையில்' எதிர்பார்க்கப்படுகிறது.

'வரவு செலவுத் திட்ட நிலை தொடர்பான அறிக்கை' ஆண்டுதோறும் வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தால் தொகுக்கப்பட்டு, பொருளாதாரத் தகவல்களுக்கான இலங்கையின் முதன்மை தளமாக உள்ள PublicFinance.lk இல் வெளியிடப்படுகிறது.

இலங்கையின் வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தின் நிதி, பணம் மற்றும் பொருளாதார மதிப்பீடுகளின் வலுவான பகுப்பாய்வு மற்றும் புறநிலை மதிப்பீட்டை இந்த அறிக்கை வழங்குகிறது. அரசாங்க நிதி பற்றிய பாராளுமன்றக் குழுவால் (COPF) வெளியிடப்படும் வரவு- செலவுத் திட்ட அறிக்கையின் நோக்கத்தையே இந்த அறிக்கையும் பிரதிபலிக்கிறது. இந்த இரண்டு அறிக்கைகளும் வரவு-செலவுத் திட்டம் பற்றிய புரிதலையும் விவாதத்தையும் பொதுமக்கள் மத்தியிலும் பாராளுமன்றத்திலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. வெரிட்டே ரிசேர்ச்சின் 'வரவு-செலவுத் திட்ட நிலை தொடர்பான அறிக்கை' பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் அரசாங்கத்தின் கணிப்புகளை விடவும் வரவு-செலவுத் திட்ட விளைவுகள் தொடர்பாக மிகவும் துல்லியமான கணிப்புக்களைத் தொடர்ச்சியாக வழங்கியுள்ளது. இது இலங்கையில் தொழில்சார் பொருளாதாரப் பகுப்பாய்வு மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஒரு முக்கியமான மேலதிக உள்ளீட்டை உருவாக்குகிறது.

> **“ மிகைப்படுத்தப்பட்ட வரி வருமானம் 1991ஆம் ஆண்டிலிருந்து வரவு–செலவுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருமான இலக்கை இலங்கை இதுவரை எட்டவில்லை.**
> **மிகச் சமீபத்தில், வழிவகைகள் பற்றிய பாராளுமன்ற குழு, 2023ஆம் ஆண்டில் வரவு செலவு திட்ட இலக்கை விட வரி வருமானம் 13% குறைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.**

மிகைப்படுத்தப்பட்ட வரி வருமானம்

1991ஆம் ஆண்டிலிருந்து வரவு-செலவுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருமான இலக்கை இலங்கை இதுவரை எட்டவில்லை. மிகச் சமீபத்தில், வழிவகைகள் பற்றிய பாராளுமன்ற குழு, 2023ஆம் ஆண்டில் வரவு செலவு திட்ட இலக்கை விட வரி வருமானம் 13% குறைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டில் அரசாங்கம் ரூ.4,164 பில்லியன் வருமானத்தை எதிர்பார்க்கிறது, இது 2023ஆம் ஆண்டிற்கான அதன் திருத்தப்பட்ட கணிப்புகளிலிருந்து 42% அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், வரவு செலவுத் திட்ட நிலை தொடர்பான அறிக்கை 14% பற்றாக்குறையைக் கணித்துள்ளதுடன், வருமானம் ரூ.3,570 பில்லியனாக இருக்கும் என எதிர்வு கூறியுள்ளது.

பெறுமதி சேர் வரி (VAT) மூலம் கிடைக்கும் வருமானம் மிகைப்படுத்தப்பட்டதே கணிக்கப்பட்ட பற்றாக்குறையில் 61 சதவீதத்திற்குக் காரணம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டாண்மை வருமான வரி, தனிநபர் வருமான வரி, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) மற்றும் சுங்க இறக்குமதி வரி ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் மிகைப்படுத்தப்பட்டதே மீதமுள்ள 39 சதவீதத்திற்குக் காரணமாகவுள்ளது.

வருமானத்தில் வட்டி விகிதம்

உலகில் வருமானத்திற்கு அதிக வட்டிச் செலவு விகிதத்தை இலங்கை கொண்டுள்ளதுடன், இந்த விகிதத்தைக் குறைப்பது பேரினப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிலைத்தன்மைக்கு முக்கியமானதாகும். 2024ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் இந்த விகிதத்தை 64% ஆகக் குறைக்க எதிர்பார்க்கிறது.

எவ்வாறாயினும், 'வரவு-செலவுத் திட்ட நிலை தொடர்பான அறிக்கையின்' வருமானக் கணிப்புகள் மற்றும் வட்டிச் செலவுகள் தொடர்பான அரசாங்கக் கணக்கீடு ஆகியவை, கடந்த சில ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் இது 70 சதவீதத்தைத் தாண்டும் என குறிப்பிடுகின்றன. கடன் நிலைத்தன்மையின் முக்கிய குறிகாட்டியாக பொருளாதார வல்லுநர்கள் கருதும் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்ட பொருளாதார மீட்சித் திட்டத்தில் இலங்கை இதன் மூலமாக பின்தங்கும் நிலை ஏற்படும்.

# ஜே.வி.பியின் ஈஸ்டர் விசாரணை நகைப்புக்குரியது

கத்தோலிக்க மக்களைக் கொன்று குவித்த ஜே.வி.பிக்கு இம்முறை கத்தோலிக்க வாக்குகள் கிடைக்கும் என நம்ப முடியாது என அமைச்சர் தெரிவித்தார்.

களனியில் ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு அரிசி வழங்கும் வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி - தேர்தல் நெருங்குகின்றது என்பதனாலா அரிசி விநியோகம் செய்கிறீர்கள்?

பதில்- அண்மைக் காலத்தில் எமது நாட்டில் அரிசியின் விலை அதிகப்படியாக இருந்தது. அதனால் அரிசி விலையைக் கட்டுப்படுத்த ஆளுநர்கள் ஊடாக அரசாங்கம் அரிசியைக் கொள்வனவு செய்தது. அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். கோவிட் மற்றும் போராட்டம் காரணமாக, புத்தாண்டு மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட முடியாமல் போனது. ஆனால் தற்போது பொருளாதாரம் ஓரளவுக்கு நிலையாக உள்ளது. மக்களின் தியாகத்தினால் தான் இது நடந்தது. குறைந்த வருமானம் பெறுபவர்கள் அதிக தியாகங்களைச் செய்தனர். நலன்புரிப் பணிகளைச் செய்ய வேண்டாம் என்று சர்வதேச அமைப்புகள் கூறினாலும் ஜனாதிபதி நலன்புரிப் பணிகளைச் செய்கிறார்.

கேள்வி- ஈஸ்டர் தாக்குதல் நடந்து இன்றுடன் 5 வருடங்கள் ஆகின்றன. மக்கள் விடுதலை முன்னணி அது தொடர்பில் விசாரணை நடத்துவதாக உறுதியளித்துள்ளதே?

பதில் - இப்படியான பெரிய மூளைக்காரன் யார் என்று அனைவருக்கும் தெரியும். ஜே.வி.பி. இவ்வாறான வாக்குறுதிகளை வழங்கியது நல்லது. ஏனெனில் அவர்களின் தேசியப் பட்டியலில் இருந்த இப்ராஹிமின் மூன்று மகன்களும் கொலைசெய்து கொல்லப்பட்டனர். அதற்கு குழுக்களை நியமித்து விசாரணை நடத்தி நேரத்தை வீணடிப்பதில் அர்த்தமில்லை. இப்ராஹீம் இன்னும் உயிருடன் இருக்கிறார், அவருடைய மகன்கள் ஏன் இப்படிச் செய்தார்கள் என்று அவரிடம் கேட்க வேண்டும். அதை அவர் நாட்டிற்குச் சொல்வார் என்றார் எல்லாம் முடிந்து விடும். ஈஸ்டர் தாக்குதலுக்குக் காரணமானவர்களைத் தேசிய பட்டியலில் வைத்துக் கொண்டு விசாரணை நடத்துவதாகக் கூறும் ஜே.வி.பியை விடக் கேலிக்கூத்து இந்த நாட்டில் வேறு எதுவும் இல்லை.

கேள்வி: கத்தோலிக்க வாக்குகளைப் பெற்றபோது, நீங்கள் எல்லோரும் அவ்வாறு கூறவில்லை. ஜே.வி.பிக்கு இம்முறை வாக்கு கிடைக்குமா?

பதில்- ஜே.வி.பியின் தேசியப் பட்டியலிலிருந்த இப்ராஹிமின் மகன்கள் கத்தோலிக்கர்களைக் கொன்றனர். அப்படியானால் ஜேவிபிக்கு கத்தோலிக்க வாக்குகள் கிடைக்குமா?

கேள்வி- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு என்ன நடக்கும்?

பதில்- நான் இன்னும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நேசிக்கிறேன். மைத்திரிபால சிறிசேனவைப் பற்றி நான் முன்னர் கூறியது இன்று உண்மையாகியுள்ளது.

கேள்வி- இலங்கை சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை நீங்கள் பிடிப்பீர்களா?

பதில் - எங்களுக்குத் தேவையில்லை. மக்களைப் பாதுகாக்கவே நாங்கள் விரும்புகிறோம்.

கேள்வி- திருமதி சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாராமே? அது பற்றி உங்களின் கருத்து என்ன?

பதில்- முன்னாள் அரச தலைவர்கள் இதனை நாட்டுக்குச் செய்தார்கள். திருமதி சந்திரிகா சுனாமி அனர்த்தத்தை எதிர்கொண்டார். போரிலிருந்து நாட்டைக் காப்பாற்றினார் மகிந்த அவர்கள். ஜனாதிபதி கோட்டாபய மக்களை கோவிட் நோயிலிருந்து வெளியேற்றினார். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயற்பட்டு வருகின்றார். ஆனால் கத்தி கூச்சல் போட்ட ஜேவிபி தலைவர்கள் ஒவ்வொரு அரசாங்கத்தையும் ஆதரித்தனர். நாட்டுக்குச் செய்த ஒரு சேவையைச் சொல்லுங்கள்.

கேள்வி- 69 இலட்சம் வாக்குகளை 10 கிலோ கிராம் அரிசியால் காப்பாற்ற முடியுமா?

பதில்- நாங்கள் வாக்குகளுக்காக வேலை செய்யவில்லை. இங்கு அனைத்து அரசியல் சித்தாந்தங்களையும் கொண்டவர்கள் உள்ளனர். பொருட்கள் விநியோகத்திற்காக மக்கள் வாக்களிக்கமாட்டார்கள். ரணில் விக்ரமசிங்கவை மக்கள் தெரிவு செய்கிறார்கள். ஏனெனில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற. அவரால் மட்டுமே முடியும் என தெரிவித்தார்.

# 40,000 ஆசிரியர்களுக்கு...

தென் மாகாணத்தில் 3,100 வெற்றிடங்களும், பதிவாகியுள்ளன மற்றும் மத்திய மாகாணத்தில் கிட்டத்தட்ட 6,200 வெற்றிடங்களும், பதிவாகியுள்ளன.

அரசு செலவினங்களைக் கட்டுப்படுத்த ஆசிரியர் நியமனத்தை அரசு வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறது என ஸ்டாலின் கூறினார்.

"தற்போது உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பா விட்டால் இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்படும்.

"இருப்பினும், அரசாங்கம் மேல் மாகாணத்திற்கு 2,500 ஆசிரியர்களை இரண்டு முறை பணியமர்த்தியது, ஆனால் அவர்கள் முறையாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை.

எனவே, தற்போதுள்ள ஆசிரியர் பணியிடங்களுக்கு உரிய முறையில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்றார்.

# "உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதிகளுடன் எமக்கு டீல் இல்லை"

5 வருடங்களுக்கு முன்னர், இலங்கையில் உள்ள பல தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் மீது பயங்கரவாதிகள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலினால் இலங்கையில் கத்தோலிக்கர்கள் உட்பட பொது மக்கள் உயிர்களையும் அவயவங்களையும் இழந்துள்ளனர். 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இந்தத் தாக்குதலின் உண்மை தகவல்களோ, இதன் பின்னணியில் செயற்பட்ட சூத்திரதாரிகள், பிரதான நபர்கள், குழுக்கள் குறித்த உண்மைகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து தலைவர்களும் உண்மையைக் கண்டறிந்து தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தனர், ஆனால், மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மட்டுமே அந்த வாக்குறுதிகளை வழங்கினர், பின்னர் அவர்கள் ஆட்சிக்கு வந்து மக்களை ஏமாற்றி உண்மைகளை மறைத்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான சூழலில் இந்த கொடூர தாக்குதலுடன் தொடர்புடைய எவரையும் எந்த வகையிலும் காப்பாற்றத் தான் செயற்படமாட்டேன் என்றும், சுதந்திரமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணை நடத்தப்பட்டு, இந்த பயங்கரவாதத் தாக்குதலைத் திட்டமிட்ட சூத்திரதாரிகளையும் குழுக்களையும் சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு எதிராக அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் கத்தோலிக்க பேரவை கொழும்பு புனித மரியாள் முதியோர் இல்லத்தில் ஏற்பாடு செய்திருந்த அன்னதான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

மேலும், இந்த கொடூர தாக்குதலுக்குச் சட்டத்தின் கீழ் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்றும், இதன் பின்னணியில் உள்ள சக்திகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் என்றும், கர்தினால் உட்பட கத்தோலிக்க திருச்சபைக்கும் நாட்டு மக்களுக்கும் தான் உறுதியளித்துள்ளதாகவும், பதவிகளை பாதுகாப்பதற்காக பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரோகம் இழைக்கமாட்டேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு உறுதியளித்தார்.

அத்துடன், இதுவரையில் உருவாக்கப்பட்ட அரசாங்கங்கள் மக்களையும், கத்தோலிக்க சமூகத்தையும், கர்தினால் அவர்களையும் ஏமாற்றி, ஆட்சிக்கு வந்த பின் இதற்கு நீதி வழங்காமல் பிரதான சூத்திரதாரிகளைப் பாதுகாக்கும் போக்கு இதுவரை காணப்பட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த கொடூர தாக்குதலை நடத்தியவர்கள் தரம் பாராமல் தண்டிக்கப்படுவார்கள் என்றும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகளுடன் சஜித் பிரேமதாசவாகிய நான் ஒருபோதும் டீல் செய்துகொள்ளமாட்டேன் என்றும், தராதரம் பாராமல் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் அவரது பாரியார் திருமதி ஜலனி பிரேமதாசவும் இந்த அன்னதான நிகழ்வில் கலந்து கொண்டார்.

மேலும் அருட்தந்தை ஜூட் கிருஷாந்த தலைமையில் ஆராதனை வழிபாடுகளும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அகதி ஒருவர் இந்தியாவில் வாக்களிப்பு

திருச்சி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நளினி என்ற பெண்ணுக்கு, இம்முறை திருச்சி பாராளுமன்றத் தொகுதியில் வாக்களிக்க வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் முதன்முறையாக இவருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாக்களித்த பின்னர் கருத்து தெரிவித்துள்ள நளினி,

"இலங்கைத் தமிழர்களுக்கான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை, மாவட்ட நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள், ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் கண்காணிப்புடன் வைத்திருப்பார்கள். அதனால் இங்குள்ள மக்கள் மன உளைச்சலில் காணப்படுகின்றனர்.

எங்களை இலங்கைத் தமிழர் என்று தெரிவிப்பதை விட, இந்திய வம்சாவளியினர் என்று அதிகாரிகள் அடையாளப்படுத்த வேண்டும் என்பதே எங்களின் விருப்பம்" என கண்ணீர் மல்க குறிப்பிட்டுள்ளார்.

# "வேதன அதிகரிப்பை மேற்கொள்ளவும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்தினார்.

ஊவா பரணகம, அம்பகஸ்தோவ மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

"நாடு அசாதாரணமான சூழ்நிலையில் இருந்த போது தைரியமாக நாட்டை மீட்டெடுக்க முன்வந்த தலைவர் என்ற வகையில் பல வேலைத் திட்டங்கள் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டன. நாட்டு மக்கள் போக்குவரத்துக்கே சிரமத்திற்கு இருந்த காலம் ஒன்று இருந்தது அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசைகளில் நின்றிருந்த காலமும் இருந்தது இன்று அனைத்தும் மாறி உள்ளது. நாடு மெதுவாகப் பழைய நிலைமைக்குத் திரும்பி வருகின்றது" என்றார்.

நாட்டை மீட்டெடுத்து வெற்றி கண்டதைப் போன்று நாட்டின் பொருளாதாரத்தை முதுகில் சுமக்கும் மலையக மக்களின் ஒரு நாள் வேதனத்தை அதிகரிக்கவும் ஜனாதிபதியால் முடியும் என்ற நம்பிக்கை நம் அனைவருக்கும் உள்ளது. ஆகவே, பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அழுத்தம் ஒன்றைப் பிரயோகித்து பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# சு.கவின் பதில் தவிசாளர் விஜயதாச



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தரப்பினர் எதுல்கோட்டையில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் நிறைவேற்றுக் குழுவை சனிக்கிழமை (21) காலை கூட்டி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் தடை உத்தரவைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வியாழக்கிழமை (18) மேலும் நீட்டித்தது. இந்த உத்தரவு மே 9ம் திகதி வரை அமலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# "யாழ். தலைவர்களால் விமோசனம் இல்லை"

வ.சக்தி



"கட்சிக்குள்ளேயே ஓர் அமைப்பை ஒன்றுபடுத்த முடியாத தலைவர்கள் நாம் மட்டடமே என்று சிந்திக்கின்ற யாழ். தலைவர்கள், இந்த மண்ணுக்கும் இந்த நாட்டுக்கும் ஒன்றையுமே பெற்றுக்கொடுக்கவுமில்லை, பெற்றுக் கொடுக்கப் போவதுமில்லை" என வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - எருவில் கிராமத்தில் சனிக்கிழமை (20) மாலை நடைபெற்ற சித்திரை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் ஒக்டோபர் நடுப்பகுதிக்கு முன்னர் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி அவர்கள் தெரிவித்துள்ளார். அதிலே நாட்டில் அடுத்த தலைவர் யார் என்ற பலமான கேள்வி இருக்கின்றது. எமக்கான தலைவரைத் தேர்வு செய்வதற்கு அதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்குரிய திட்டங்களை நாங்கள் தீட்டியுள்ளோம்.

தற்போது இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களை மையப்படுத்தியதாக பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற தகவல்கள் ஊடகங்களில் வெளிவருகின்றன. இந்த பொது வேட்பாளர் தொடர்பில் நாங்கள் ஆழமாக ஆராய வேண்டும். யாரும் அரசியலுக்காக கருத்துக்களை சொல்லலாம்.

இவ்வாறானவர்கள் முன்னரும் வடகிழக்கிலுள்ள சிறுபான்மை மக்களை ஒற்றுமைப்படுத்துவோம் என சொல்வார்கள், அதனைச் செயல்படுத்த முடியாமல் போய்விடும். இதற்கு நல்ல உதாரணம்தான் இலங்கைத் தமிழரசிக் கட்சியினுடைய தேசிய மாநாடும், அதன் தலைவர் தெரிவும். ஸ்ரீலங்கா அரசிடமிருந்து தீர்வு பெற்றுத் தருவோம் என்றவர்கள், ஸ்ரீலங்கா நீதித்துறையில் காலடியில் வீழ்ந்து கிடக்கின்றார்கள்.

கட்சிக்குள்ளேயே ஒரு அமைப்பை ஒன்றுபடுத்த முடியாத தலைவர்கள் நாம் மட்டடமேதான் என சிந்திக்கின்ற யாழ். தலைவர்கள், இந்த மண்ணுக்கும் இந்த நாட்டுக்கும் ஒன்றையுமே பெற்றுக் கொடுக்கவுமில்லை, பெற்றுக்கொடுக்கப் போவதுமில்லை. அந்த அடிப்படையில் பொது வேட்பாளர் என்ற கருத்தும் அங்கிருந்துதான் ஆரம்பித்திருக்கின்றார்கள். அது வெற்றிபெற முடியாத, திட்டமிடல் இல்லாத ஒரு கற்பனை. அவர்கள் ஒலிவாங்கிகளுக்கு முன்னால் கருத்துக்களை வெளியிடும் ஒரு புரளியாகும். எனவே, சிறுபான்மை மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதென்பது காலத்திற்கு பொருத்தமில்லாத செயற்பாடாகும்" என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், கிராம பொதுமக்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் இளைஞர் கழக உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "சவால்களை எதிர்கொள்ள தயார்"

எஸ்.தில்லைநாதன்



மாகாணத்தில் சுகாதாரத்துறையில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ளத் தாம் தயாராக உள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கு அதிகாரிகளின் நேர்மையான செயற்பாடுகள் அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் சேவையாற்றும் சுகாதாரத்துறைசார்ந்த உயர் அதிகாரிகளுக்கும், ஆளுநருக்கும் இடையில், ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை (19) நடைபெற்ற விசேட கூட்டத்தின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் கூட்டத்தின்போது, சுகாதார சேவையை முன்னெடுப்பதில், மாவட்ட ரீதியில் காணப்படும் இடர்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளால் ஆளுநருக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் ஆளணி பற்றாக்குறை நிலவுவதாகவும், பௌதீக வளப் பற்றாக்குறை பாரிய சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோயாளர்களின் உரிமைகளை பாதுகாத்து கரிசனையுடன் செயற்பட வேண்டிய பொறுப்பு சுகாதார அதிகாரிகளிடம் காணப்படுவதாகவும், கொள்கைகளை பின்பற்றி அதிகாரிகள் செயற்பட வேண்டும் எனவும் மத்திய அரசாங்கதிடமிருந்து ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள தாம் தயாராக உள்ளதாகவும் ஆளுநர் இதன்போது கூறியுள்ளார்.

அத்துடன், தரமான சிறந்த சுகாதார சேவையை உறுதி செய்து, அதனை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கு அரச அதிகாரிகள் அர்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 3,000 ரூபாயால் பறிபோன உயிர்

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் நபர் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் வெள்ளிக்கிழமை (19) இடம்பெற்றுள்ளது.

பிறைந்துறைச்சேனை- தாஜ்மஹால் வீதியைச் சேர்ந்த 43 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான சுலைமா லெப்பை ஜமால்தீன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், இன்னொருவரிடம் கடனாகக் கொடுத்த மூவாயிரம் ரூபாய் பணத்தைக் கேட்டபோது, ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்தக் கொலைக்கு காரணம் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு சனிக்கிழமை(20) 4 மணியளவில் வாழைச்சேனை ஹைராத் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீரில் மூழ்கி மாணவன் பலி

ரஸீன் ரஸ்மீன்

புத்தளம் - ஆராச்சிக்கட்டுவ கட்டுபத மஹாவெவயில் குடும்பத்துடன் நீராடச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி சனிக்கிழமை (20) உயிரிழந்துள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆராச்சிக்கட்டுவ, நல்லதரன்கட்டுவ, இலக்கட்டுவ பகுதியைச் சேர்ந்த 08 வயதுடைய தினேத் சத்சர என்ற பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தாயின் சகோதரியும், அவரது இரண்டு பிள்ளைகள் மற்றும் மற்றுமொரு அயலவர் ஆகியோருடன் நீராடுவதற்காகச் சென்றபோதே குறித்த மாணவன் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இளைஞனின் சடலம் மீட்பு

வ.சக்தி

மட்டக்களப்பு வாவியின், பட்டிருப்பு பாலத்தின் கீழிருந்து இளைஞனின் சடலம் சனிக்கிழமை (20) மீட்கப்பட்டதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பட்டிருப்பு பாலம் அமைந்துள்ள பகுதியில் வெள்ளிக்கிழமை (19) மாலை துவிச்சக்கரவண்டி ஒன்றும் காலணியும் கிடப்பதாக அப்பகுதியில் பயணித்தவர்கள் தெரிவித்துள்ள நிலையிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பட்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த 19 வயதுடைய யோகநாதன் கிதுசன் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய இஸ்த்தலத்திற்கு விரைந்த திடீர் மரண விசாரணை அதிகாரி வி.ஆர்.மகேந்திரன் சடலத்தைப் பார்வையிட்டதுடன் சடலம், பிரதேப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


# நீராடச் சென்ற மாணவி நீரில் மூழ்கி உயிரிழப்பு

மொஹொமட் ஆஸிக்

மஹாவலி ஆற்றில் நீராடச் சென்ற 18 வயதுடைய மாணவி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்லேகல பிரதேசத்தைச் சேர்ந்த அருன்திகா பிரசாதினி என்ற 18 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி உறவினரின் வீடொன்றுக்கு வந்திருந்த நிலையில், உறவினர்களுடன் கண்ணொருவ பிரதேசத்தில் உள்ள மஹாவலி கங்கையில் நீராடச் சென்ற போது, நீரில் மூழ்கியுள்ளதையடுத்து, உறவினர்கள் அவரை காப்பாற்ற முயன்ற போதும் முடியாமல் போயுள்ளது.



பின்னர் அயலவர்களின் உதவியுடன் மாணவியைக் காப்பாற்றி பேராதனை வைத்தியசாலையில் அனுமதித்த போதும், அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சூத்திரதாரிகளை கைது செய்ய கோரி ஆர்ப்பாட்டம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தொடர்புபட்ட சூத்திரதாரிகளைக் கைது செய்யக் கோரி, மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை (21) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்தல் இடம்பெற்று 5 வருட நினைவு தினத்தை முன்னிட்டு, சூத்திரதாரிகளைக் கைது செய்யக் கோரி சமூக செயற்பாட்டாளர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்ததையடுத்து, மட்டு. காந்தி பூங்காவின் முன்பாக பொதுமக்கள் அரசியல்வாதிகள், மற்றும் சகூக செயற்பாட்டாளர்கள், மதகுருமார்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் ஒன்று திரண்டுள்ளனர்.





# மலையகத்தில் ஆர்ப்பாட்டம்...

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 1,700 ரூபாயை வழங்குமாறு வலியுறுத்தியும், பெருந்தோட்டக் கம்பனிகளின் அராஜக போக்கை கண்டித்தும் மலையக நகரங்களில் ஞாயிற்றுக்கிழமை (21) போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(மலையக நிருபர்கள்)



















# ஆண்டுகள் ஐந்து உருண்டோடினாலும் வடுக்கள் ஆறவில்லை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இலங்கை படையினருக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், குண்டுச் சத்தங்கள் ஓய்ந்திருந்தன. மரண ஓலங்கள் கேட்கவில்லை. எனினும், தங்களுடைய பிள்ளைகளைக் காணவில்லையெனத் தேடியலைந்து கண்ணீர் விட்டோரின் எண்ணிக்கைக்குக் குறைவே இல்லாமல் இருந்தது. கண்ணீருக்கு இன்றும் குறைவில்லை.

எனினும், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு வர்த்தக தலைநகரத்தில் நட்சத்திர ஹோட்டல்கள் மூன்று, தேவாலயங்கள் மூன்று ஆகியவற்றின் மீது, ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய குழுவொன்றினால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குப் பின்னர் முஸ்லிம் அனைவரையும் வெறுப்புடன் பார்க்கத் தொடங்கி விட்டனர். இது பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாய் அமைந்திருந்தன.

கொழும்புக்கு வெளியே, மட்டக்களப்பு, நீர்கொழும்பு மற்றும் தெஹிவளை ஆகிய பிரதேசங்களிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன இவற்றில், வெளிநாட்டவர் 45 பேர் உட்பட 269 பேர் மரணமடைந்தனர். 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அதில் பலரும் சதாகாலம் அங்கவீனமடைந்துள்ளனர். உறவுகளை இழந்தவர்கள் இன்னும் கண்ணீர் விட்டுக் கதறியழுதுகொண்டே இருக்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பின்னர் ஒவ்வொரு வருட நிறைவிலும், ஆட்சியில் இருக்கும் அரசாங்கம், அரசியல் கட்சிகளால் ஏதாவது உறுதிமொழிகள் வழங்கப்படும். இவ்வருடமும் அவ்வாறே உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. அரசியல் உறுதிமொழிகளை, ஆற்றில் கரைத்த புளியாகவே இருக்கும் என்பது கடந்தகால படிப்பினைகளாகும்.

கண்டியில் ஊடகவியலாளர்களிடம் மார்ச் மாதம் 22ஆம் திகதி கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை பின்னால் இருந்து நடத்தியவர்களை தமக்குத் தெரியும் என்றும் நீதிமன்றம் தமக்குக் கட்டளையிட்டால் தாம் அதனை வெளியிடத் தயார் என்றும் அவர் கூறியிருந்தார். அதனடிப்படையில் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டபோது, அதனை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே மறுத்துவிட்டார்.

இந்நிலையில், தற்போதைய ஜனாதிபதி ரணில், பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது, தாம் நிரந்தர ஜனாதிபதியாகப் பதவியேற்று பிரிட்டனின் ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸ் மூலம் உயர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைப் பற்றி விசாரணைகளை ஆரம்பிப்பதாகக் கூறினார். இன்னுமே நடைபெறவில்லை.

சூத்திரதாரியைக் கண்டுபிடிப்போம் என்று உறுதிமொழியை வழங்கியவர்கள், இதுவரையிலும் கண்டுபிடிக்கவே இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் இவ்விவகாரத்தைப் பற்றி அடிக்கடி பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

ஜே.வி.பியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும், ஆட்சிப்பீடம் ஏறினால், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுப்போம் என்று சூளுரைத்துள்ளது. ஆக ஆண்டுகள் ஐந்து உருண்டோடினாலும் வடுக்கள் ஆறவில்லை என்பது மட்டுமே எஞ்சியிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கவும் குற்றவாளிகளைத் தண்டிக்கவும் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

காலம் கைமாறிப் போகும். செல்வந்தர்களின் பரம்பரை அதே நிலையில் தொடர்ந்தும் இருப்பது அரிது. அரசியல் தலைமைகள், பதவி மாறியபடியே இருக்கிறது.

கல்வியில் சமநிலைத் தன்மை ஏற்பட்டதால் வருமானம் குறைந்தவர்களின் பிள்ளைகளும் உயர் நிலைக்கு வரமுடியும். இன்ப, துன்ப நிலை மாறுவது போல வையகத்தின் மாற்றங்கள் பாகுபாடின்றி சுழற்சி முறையில் நடைபெற்றபடியே நடந்தேறும்.

அநேகமான மனிதர்களின் வாழ்வின் எழுச்சிகளை துன்பியல் அனுபவங்களே ஏற்படுத்துகின்றன. எனினும், இந்த விடயங்களைச் சோம்பேறிகள் உணர்வதேயில்லை.

மூளையை, உயிர்ப்பிக்காமல் அநேகர் உறங்கியபடியே இருக்கின்றனர். இரும்பு உபகரணங்களை உபயோகிக்காமல் விட்டால் அது துருப்பிடித்துவிடும். எந்த அழகான பொருள்களையும் மெருகேற்றினால்தான் அது ஜொலிக்கும். கருமங்கள் ஒருவரை நல்ல உருவகிக்கிறது.

- பருத்தியூர் பால வயிரவநாதன்

# ஐந்து வருடங்களாகியும் தொடரும் விசாரணை

**லக்ஸ்மன்**

இலங்கையில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் பிரித்தானிய சுற்றுலாப் பயணிகள் 8பேர் உட்பட 275க்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷக்களுக்கு விசுவாசமாகச் செயற்பட்டவர்கள், இருந்ததாகக் குற்றச்சாட்டுக்கள் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற காலம் முதலே வெளிவந்திருந்தன.

பிரித்தானியாவின் செனல் 4 கூட தற்போதைய இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் உள்ளிட்டோரின் சம்பந்தம் குறித்த அசாத் மௌலானாவின் தகவல்களை உள்ளடக்கியதாக ஆவணப்படத்தை வெளியிட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் திட்டம் ஒன்றிரண்டு நாட்களில் உருவாக்கப்படவில்லை, அது இரண்டு, மூன்று வருடங்களாகத் திட்டமிடப்பட்டது என பிள்ளையான் தரப்புடன் இணைந்திருந்து தற்போது ஐரோப்பிய நாட்டில் தஞ்சமடைந்துள்ள அசாத் மௌலானா மௌலானா ஐரோப்பிய புலனாய்வு அமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் தெரிவித்திருக்கிறார். அந்தக் கருத்துக்களும் கண்டுகொள்ளப்படாதவையாக மாறிப் போயிருக்கின்றன.

சூத்திரதாரி, சம்பந்தப்பட்டவர்கள், ஒத்தாசையாக இருந்தவர்கள், குற்றவாளிகள், தகவல் வழங்கியவர்கள் என இக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால், இதுவரையில் உண்மையானவர்கள் என்று யாரும் தண்டனைக்குட்படுத்தப்படவில்லை.

இத்தனையையும் இயக்கியவர் கண்டுபிடிக்கப்படவில்லை. ராஜபக்ஷக்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்காக, இஸ்லாமிய அரசு அமைப்புடன் தொடர்புடைய குண்டுதாரிகள் இத்தாக்குதல்களை மேற்கொண்டனர் என்பதுதான் இப்போது வரையில் ஊர்ஜிதமானது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ராஜபக்ஷக்களின் திட்டமே. இந்த தாக்குதலுக்கு ராஜபக்ஷ குடும்பத்தினரே நேரடியாகப் பொறுப்பு என்று பலரும் கருத்துக்களை முன்வைத்திருந்தாலும், இதனை நிரூபிப்பதற்கு யாரும் தயாரில்லை. கடந்த மாதத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்குதலின் பிரதான சூத்ரதாரியை தான் அறிவேன் என தெரிவித்த கருத்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அதன் பின்னர் அவர், குற்றப்பலனாய்வுத் திணைக்களத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார். சில நாட்களில் அது ஓய்ந்து போனது. அதன் பின்னர் கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சறில் காமினி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதன்போது, 2019 ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில், 2018 நவம்பர் 30ஆம் திகதியன்று வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உயிரிழந்த இடத்தில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவிற்கு தகவல் கிடைக்கப்பெற்றது. அந்த பொருட்களை அங்கு வைத்தது யார்?. சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பது தெரியவந்த ஐ.பி. முகவரியைப் பயன்படுத்தியவர்கள் யார்?.

வவுணதீவு சம்பவம் தவறாகச் சித்தரிக்கப்பட்டது. வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொலை செய்யப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என இராணுவ புலனாய்வு பிரிவினர், முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவிற்கு பொய்யான தகவல்களை முன்வைத்தமை. தெஹிவளையில் தாக்குதல் மேற்கொள்வதற்கு முன்னர் தற்கொலை குண்டுதாரியின் தொலைபேசிக்கு அழைப்பு வந்தமை சி.சி.ரி.வியில் பதிவாகியுள்ளது.

அந்த அழைப்பினை ஏற்படுத்தியவர்கள் யார்?. தெஹிவளையில் தாக்குதல் மேற்கொண்ட தற்கொலைதாரியின் வீட்டிற்குச் சென்று விசாரணை மேற்கொண்ட அதிகாரிகள் யார்?.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் தற்கொலை குண்டுத்தாக்குதல் மேற்கொண்ட தற்கொலைதாரியை அழைத்து வருமாறு தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பிலிருந்த சுரேஷ் சலே, அசாத் மௌலானாவிடம் தொலைபேசியில் உரையாடியுள்ளார். 2018 புத்தளத்தில் சுரேஷ் சலேவிற்கும் சஹ்ரானுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சஹ்ரான் மனைவியிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, அபுஹித் என்ற நபர் தொடர்பில் கூறியுள்ளார். உண்மையில் யார் அந்த அபுஹித் ஆகிய விடயங்கள் தொடர்பில் அருட்தந்தை கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயங்களுக்கு விடை காண்பது ஐந்து வருடங்களின் பின்னரும் தேவையாக இருக்கிறது. 2019 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில் செனல் 4 கடந்த வருடம் வெளியிட்ட காணொளியில் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

ஆனால், தன் மீதான பொய்யான குற்றச்சாட்டுகளை வன்மையாகக் கண்டிப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

2015 - 2020 வரை சிறையிலிருந்த என்னால் இதனை எப்படிச் செய்ய முடியும்? இந்த தாக்குதல்களில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கும் என் மீது பழி போடுவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றும் குறிப்பிட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக ஈஸ்டர் படுகொலை என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றினை கடந்த மாதத்தில் வெளியிட்டதுடன், நேற்றைய தினம் அவரது அலுவலகத்தில் குண்டுத்தாக்குதலில் உயிர்நீத்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வினை நடத்தியுமிருக்கிறார்.

அதே நேரத்தில், குண்டுத் தாக்குதலில் பலியானவர்களுக்கான நினைவேந்தல்களும் அத்தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளைச் சுயாதீனமாக நடத்தப்படுதல், குற்றவாளிகள் தண்டிக்கப்படல், நீதி வழங்கல் குறித்து போராட்டங்களும் நாடு பூராகவும் நடைபெற்றுள்ளன.

கடந்த வருடத்தில், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டோர் உயிர்த்த ஞாயிறு படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

அரசியல்வாதிகளுக்கு அப்பாற்பட்டு கத்தோலிக்க திருச்சபையும் இத்தாக்குதல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றைக் கோரியது. ஆனால், பூசி மெழுகல்களுடன் அது மறக்கப்பட்டதாயிற்று. மீண்டும் இவ்வருடத்திலும் ஏப்ரல் 21இல் ஒரு சிலர் பேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், பயன் ஏதும் விளையும் என்பது சந்தேகமே.

அதே நேரத்தில், அறிக்கைகள் தயாரிக்கப்படுவதனால் காத்திரமான மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த முடிவுகள் ஏதும் வராது. சுயாதீன விசாரணைக் குழுவொன்றின் மூலமே சுயாதீனமான, பாரபட்சமற்ற, நீதியான, வெளிப்படைத்தன்மையுடன் கூட பரந்துபட்ட விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என பேராயர் மல்கம் ரஞ்சித் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து சுயாதீன விசாரணை ஒன்று தேவையென, பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, கடந்த ஆண்டு, பாப்பரசரிடம் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருந்தார்.

இருந்தாலும், அவை எவையுமே நடைபெறவில்லை. அவருடைய நிலைப்பாடு இப்போதும் அவ்வாறே இருந்துவருகிறது என்பது மாத்திரமே யதார்த்தமாகும். உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களையடுத்து, நாட்டில் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் நாட்டின் பாதுகாப்பை 6 மாதங்களுக்குள் உறுதிப்படுத்துவேன் என்றும் காரணம் காட்டி கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியானார், இதனையடுத்து, நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் அவருடைய கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன பெரும்பான்மை ஆசனங்களுடன் வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. ஆனால், குண்டுத் தாக்குதல் தொடர்பில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை. அதனால் ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்களுக்கு தீர்வுகள் ஏற்படுத்தப்படவில்லை. இப்போதும் விசாரணைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

2009 இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால், நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கெதிரான குற்றங்களடங்கிய பாரிய மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் இதுவரை இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இருந்தாலும், இலங்கையின் தமிழ் அரசியல் தரப்பினரும் தொடர்ந்தும் முயற்சிக்கின்றனர். புலம்பெயர் நாடுகளிலுள்ள அமைப்புகளும் அழுத்தங்களை பிரயோகித்த வண்ணமேயுள்ளன.

ஐக்கிய நாடுகளில்பிரேரணைகள் முன்வைக்கப்படுவதும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும் நடைபெற்றவண்ணமே இருக்கின்றன. காலங்கள் வருடங்களாக 15 வருடங்கள் கடந்து போய்விட்டது. அதுபோலவே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களும், கருத்து முரண்பாடுகளும், விசாரணைகளும் நடைபெறும் என்பது மாத்திரமே நிரந்தரமாகும்.

மொத்தத்தில், தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் போன்று 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களும் இருக்கும் என்பதில் மாற்றமேதுமில்லை.

## கடிதங்கள்

### நீர் தட்டுப்பாடு



திருகோணமலை மாவட்டத்தின் திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்திலுள்ள மாணவர்களுக்கு நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பாடசாலைக்கு அருகில் உள்ள இந்த கிணற்றில் இருந்தே மோட்டார் மூலமாக தாங்கிகளுக்கு பெறப்படுகின்ற நீர் மாணவர்களுடைய தண்ணீர் தேவைக்காக விநியோகிக்கப்படுகிறது.


கிணறு மூடப்படாமல் திறந்த நிலையில் இருப்பதனால் மிகவும் மாசடைந்த நிலை காணப்படுகின்றது. எனினும், இந்த நீரையே மாணவர்கள் தமது நீர் தேவைக்காக பயன்படுத்தி வருகின்றார்கள்.

RDS நிறுவனத்தினால் அமைத்துக்கொடுக்கப்பட்ட நீர் சுத்திகரிக்கின்ற இயந்திரம் கொண்ட தொகுதி பாடசாலைக்கு அருகிலே பாடசாலை வளாகத்தினுள் இருக்கின்ற போதிலும், அது நீண்ட காலமாக பாவனைக்கு உட்படுத்தப்படாத நிலையில் பூட்டி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அதிகாரிகள் இந்த நீர் சுத்திகரிக்கின்ற தொகுதியை இயக்குகின்ற அளவிற்கு அதனை முன்னேற்படுத்தி மாணவர்களுடைய நீர் தேவைக்கு சிறந்த தீர்வை பெற்றுத்தர முன்னேற வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகிறது.

- அ.அச்சுதன்

# ஜப்பானிடமிருந்து 3 புதிய மானிய உதவித் திட்டங்கள்



3 செயற்திட்டங்களுக்கான நிதி மானிய உதவிகளை வழங்குவதற்கான உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி மற்றும் நிதி அமைச்சு, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் கே.எம்.எம்.சிறிவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

முதலாவது திட்டம் 200 மில்லியன் ஜப்பானிய யென்களுக்கானதாக (சுமார் ரூ. 416 மில்லியன்) அமைந்திருப்பதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

இரண்டாவது திட்டம் 404 மில்லியன் ஜப்பானிய யென்கள் (சுமார் ரூ. 842 மில்லியன்) பெறுமதி வாய்ந்ததாக அமைந்திருப்பதுடன், வட மாகாணத்தின் பெண்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் அமைந்துள்ளது. மூன்றாவது திட்டம் 1 பில்லியன் ஜப்பானிய யென்கள் (சுமார் ரூ. 2 பில்லியன்) பெறுமதி வாய்ந்ததாக, கரையோரப் பகுதிகளில் கடல்சார் எண்ணெய் கசிவுகளுக்குத் துலங்கலை வெளிப்படுத்தலை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

(1) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்றொழிலாளர்களின் பாதுகாப்புக்கான ஆதரவு

கடற்றொழில் அமைச்சினூடாக, கடற்றொழிலாளர்களின் பாதுகாப்புடன் தொடர்புடைய சாதனங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படும். ஜப்பானில் தயாரிக்கப்பட்ட அவசர படகு மற்றும் மீட்புப் படகு போன்றன, கடல்சார் விபத்துகளின் போது துலங்கலை மேற்கொள்ளும் திறனை மேம்படுத்த எதிர்பார்ப்பதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும், பிழைக்கும் வீதத்தை அதிகரிக்கவும் எதிர்பார்க்கின்றது.

மேலும், மீன்பிடிக் கடற்றொழில் சூழல்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதினூடாக கடற்றொழில் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆதரவு அமைந்திருக்கும்.

(2) வட மாகாணத்தின் பெண்களுக்கு ஆதரவு கர்ப்பிணித் தாய் மற்றும் குழந்தை சுகாதார சாதனங்கள் அடங்கலாக, பெண்களுக்கு ஆதரவளிக்கும் சாதனம் வட மாகாண சுகாதார திணைக்களத்தினூடாக வழங்கவும், கல்வி அமைச்சினூடாக தொழிற்பயிற்சிகளுக்கு அவசியமான தொழிற்துறைசார் தையல் இயந்திரங்களும் வழங்கப்படும்.

இவற்றினூடாக வட மாகாணத்தைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தை சுகாதாரத்தை மேம்படுத்தவும், பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பெண்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வலுவூட்டலுக்கு இந்த உதவி பங்களிப்பு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(3) SLCG இன் எண்ணெய் கசிவு துலங்களை மேம்படுத்தல் மற்றும் கொள்ளளவு திறனை மேம்படுத்துவதற்கான ஆதரவு

இலங்கை கரையோர பாதுகாப்பு பிரிவுக்கு எண்ணெய் கசிவு துலங்கலுடன் தொடர்புடைய சாதனங்கள் (எண்ணெய் பிரித்தெடுப்புக்கான கப்பல்கள், எண்ணெய் மீட்புக் கட்டமைப்புகள் போன்றன) வழங்கப்படும்.

அதனூடாக, கரையோரப் பிரதேசங்களில் கடல்சார் எண்ணெய் கசிவுகளுக்குத் துலங்கலை வெளிப்படுத்தக்கூடிய வகையில் திறன் மேம்படுத்தப்படும். எண்ணெய் கசிவு விபத்துகள், பாதிப்பு பல இடங்களுக்குப் பரவுவதைத் தடுப்பது மற்றும் கடல்சார் சூழலைப் பாதுகாப்பது போன்றவற்றுக்குத் துரித கதியில் செயலாற்றுவதற்கு இந்த ஆதரவு உதவியாக அமையும். பல்வேறு துறைகளில் இலங்கையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்க ஜப்பானியத் தூதரகம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்த மானிய உதவிகளினூடாக, மீன்பிடிப் பாதுகாப்பு, பெண்கள் வலுவூட்டல் மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற இலங்கையின் முயற்சிகளுக்கு ஜப்பான் ஆதரவளிப்பதுடன், சுதந்திரமான மற்றும் திறந்த கடல்சார் கட்டமைப்பைக் கட்டியெழுப்பி பேணுவதற்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றது.

# 'மக்களின் தனியார் வங்கியாக' கொமர்ஷல் வங்கி




அண்மையில் நடைபெற்ற SLIM Kantar people's Awards 2024 விருதுகள் நிகழ்வில் கொமர்ஷல் வங்கி, '2024ஆம் ஆண்டிற்கான மக்களின் தனியார் வங்கியாக' தெரிவு செய்யப்பட்டுள்ளது, தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இந்த விருதினை பெற்றதன் மூலம் நாட்டில் மிகவும் பிரபலமான தனியார் துறை வங்கியாக தனது நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

பல்வேறு வகை பிரிவுகளில் நாட்டின் விருப்புக்குரிய வர்த்தக நாமங்களைத் தீர்மானிப்பதற்கான வருடாந்த கணக்கெடுப்பின் முடிவுகளின் அடிப்படையில் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினால் (SLIM) இந்த கௌரவமிக்க விருதானது வங்கிக்கு வழங்கப்பட்டது.

31 டிசம்பர் 2023இல் 2.656 டிரில்லியன் ரூபாய் குழும சொத்துக்கள், 2.148 டிரில்லியன் ரூபாய் வைப்புத்தொகை, 1.296 டிரில்லியன் ரூபாய் கடன் புத்தகம் மற்றும் 341.566 பில்லியன் ரூபாய் மொத்த வருமானம் ஆகியவற்றுடன் இலங்கையின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியாக திகழும் கொமர்ஷல் வங்கி நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைக்கு (SME) ஒட்டு மொத்த மிகப் பாரிய கடன் வழங்குநராகவும் திகழ்கிறது.

இந்த மக்கள் விருதானது மக்களின் அன்றாட வாழ்வில் வங்கி வகிக்கும் பிரதான பங்கு அனைத்து வாடிக்கையாளர் பிரிவுகளுக்கும் பொருத்தமான மற்றும் அணுகக்கூடிய புதுமையான தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளுடன் அவர்களின் அனுபவத்தை தொடர்ந்து மேம்படுத்துவதற்கான அதன் இடைவிடாத முயற்சி ஆகியவற்றுக்கு மக்கள் வழங்கியுள்ள அங்கீகாரத்தையே பிரதிபலிப்பதாக வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் பாரிய சமூகமான வாடிக்கையாளர்களின் மீதுள்ள ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய நிலைத்தன்மையின் மீது அசைக்க முடியாத கவனம் செலுத்துவதன் மூலம் உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பினையும் இது வெளிப்படுத்துவதாகவுள்ளது.

அதன் பன்மொழி தன்மை மற்றும் உள்ளடக்கிய சந்தைப்படுத்தல் பிரசாரங்கள், தேசிய ரீதியிலான நிகழ்வுகளுக்கான அனுசரணை மற்றும் முன்னோடி டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரசாரங்கள் ஆகியவை மூலம் அனைத்து சமூகங்கள் மீதான வங்கியின் அர்ப்பணிப்பானது தெளிவாகிறது.

மலையகம் தந்த



# மறவாத நினைவலைகள்




ச.பிரியதர்ஷன் குரூஸ் (கோல்டன்)
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


சுற்றுலா செல்வது என்றாலே சிறுவயதில் இருந்து இன்றுவரை எனக்கு அலாதிப் பிரியம். பாலர் சுற்றுலா பள்ளிச் சுற்றுலா என்று கடந்து வந்த காலவோட்டத்தில் பல்கலை வந்த பின்னும் ஓர் மகிழ்வுச் சுற்றுலா. இரண்டாம் வருடத்தில் இரண்டாம் அரையாண்டு நகர்ந்து கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் 42ஆம் அணி மாணவர்கள் சீனியாறிட்டி(seniority) பெற்று பட்டாம்பூச்சிகளாய் பல்கலையில் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கின்றார்கள். அத்தருணத்தில் 'மலையகம் நோக்கிய பயணம்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 42ஆம் அணி சுற்றுலா செல்வதற்கான முதற் கட்டமாக அதற்கென தனி வட்சப் குழு ஒன்றைத் திறந்து மாறி மாறி உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

சுற்றுலாவில் இடம்பெற வேண்டிய அனைத்து திட்டங்களும் வட்சப் குழுமத்தில் பேசி முடிந்து விட்டது. ஆனால், சுற்றுலாதான் எப்போது? என்ற ஏக்கத்தில் பலரை போன்று நானும் ஒருவனாய் காத்திருந்தேன். நாட்கள் சில நகர்ந்த பின் அந்த குழுவில் திட்டமிட்டபடி சுற்றுலாவிற்கு புறப்பட தயாராகினோம்.

வழமை போன்று அது ஒரு வெள்ளிக்கிழமை. அதிகாலை இரண்டு மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயில் முன்பாக அனைவரும் வந்து நின்றோம். எப்படியும் நம்மட கம்பஸ் பெடியள் இரண்டு மணி என்று சொன்னால் மூன்று மணிக்குத்தான் வருவாங்கள் என்பது எம் அனைவருக்கும் நன்றாகவே தெரியும். அவ்வாறிருக்க அதிகாலை மூன்று மணிக்கு அனைவரும் ஒன்று சேர்ந்து விட்டோம். 60 பேருடன் பயணிக்க வேண்டிய சுற்றுலா திடீரென 70 ஆக மாறியது. இருந்தபோதும் நாம் அனைவரும் நல்ல சிநேகிதங்கள் என்ற படியால் 'சமாளிச்சு போகலாம், ஏறுங்கடா மச்சான்' என்று அனைவரையும்பேரூந்தில் ஏற்றி விட்டோம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து பேருந்தில் பயணத்தை ஆரம்பித்தோம். எங்களோடு பயணித்த நண்பிகள் அனைவரும் முன் ஆசனத்தில் அமர, ஆண்கள் அனைவரும் பின் ஆசனங்களில் உட்கார்ந்து ஆடிப்பாடி குதூகலமாக சென்று கொண்டிருந்தோம். காலை ஆறு மணியளவில் மிகிந்தலையை அண்மித்தோம். மிகிந்தலையிலுள்ள நூதனசாலையினை பார்த்து விட்டு வரும் வழியில் ஒரு சிங்கள தாய் நீலநிற மற்றும் வெள்ளைநிற மலர்களை விற்றுக் கொண்டிருந்தாள். அந்த தாய் சிங்கள மொழியில் என்னிடம் அந்த மலர்களை வாங்குமாறு கேட்டாள். எனக்கோ சிங்களம் ஒழுங்காக தெரியாது. இருந்தும் எனக்கு தெரிந்த அரைகுறை சிங்களத்தில் "மேக ருபியல் கீயத?" என்று கேட்டு அந்த மலரை வாங்கினேன். அந்தத் தாயும் நான் மலரை வாங்கிய பின்னர், "போம ஸ்தூத்தி மல்லி" என்றாள். பின்னர் அனைவரும் இணைந்து மிகிந்தலையில் குழுப்படம் ஒன்றினை பதிவு செய்துவிட்டு அங்கிருந்து தம்புள்ளையில் அமைந்துள்ள கோல்டன் விகாரை நோக்கி பயணித்தோம்.





அந்த விகாரையில் மேலே அமைந்துள்ள தங்க நிற புத்தர் சிலையின் உயரம் ஒரு கணம் எம்மை பிரமிக்க வைத்தது. அந்த அளவிற்கு மிகவும் உயரமான சிலை அது.இந்தச் சிலையை அந்த காலத்து சிற்பிகள் எவ்வாறு வடிவமைத்திருப்பார்கள் என்று ஓர் கல்லில் அமர்ந்து சிலையை அண்ணார்ந்து பார்த்து சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, முதுகின் பின்பக்கம் ஓர் சுரண்டல். பின்னால் திரும்பி பார்க்கின்றபோது ஒரு குரங்கு நின்று ஓடுகிறது. அந்த குரங்கு திரும்பவும் வந்து கடித்து விடுமோ என்ற பயத்தில் அந்த இடத்தை விட்டு மெல்ல நகர்ந்தேன். பின் அந்த விகாரை முன்பாக எனது நண்பர்களுடன் சிறிது நேரம் உரையாடிவிட்டு அங்கிருந்து நேரடியாக கண்டி நோக்கி பேருந்து பயணித்தது. அப்போது ஆசனத்தின் பின்பகுதியில் நாங்கள் அனைவரும் பாடல்களை போட்டு நடனமாடிக் கொண்டிருக்கின்ற தருணத்தில், சிலர் தூக்க கலக்கத்தில் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள்.

இவ்வாறு செல்கின்ற வழியில் உள்ள ஒரு கடையில் உணவினை அருந்திவிட்டு அங்கிருந்து பல மணி நேரங்கள் பயணம் செய்து கண்டியை அடைந்தோம். பேருந்தில் பயணித்துக் கொண்டிருக்கின்ற போது, ஜன்னலோரமாக குளிர்காற்றும் அதேவேளை மலைகளால் பயணம் செய்யும்போது பேருந்து வளைந்து நெளிந்து சென்று கொண்டிருந்தது. அப்போது நானும் பயணக்களைப்பால் ஆசனத்தில் அமர்ந்து தூங்கினேன். சிறிது நேரம் கழித்து "கண்டி வந்துட்டு எல்லாரும் இறங்குங்க!!" என்று குரல் ஒன்று ஒலித்தது. திடீரென விழித்து பார்த்தேன். அனைவரும் பேருந்திலிருந்து இறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். நானும் கீழே இறங்கினேன். பல வர்ண வெளிச்சங்களுடன் தலதாமாளிகை தெரிந்தது. பாடசாலைக் காலங்களில் பார்த்த தலதாமாளிகையினை இன்று பல வருடங்களுக்குப் பிறகு பார்க்கிறேன். இருந்தும் முன்பு இருந்ததை விட இன்று பல முன்னேற்றங்களென எண்ணிக்கொண்டு என் நண்பர்களோடு தலதாமாளிகையின் நுழைவாயிலூடாக அனைவரும் நுழைந்தோம்;.

அங்கு ஒலிபெருக்கிகளில் சிங்கள மொழியில் பல பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அங்கு பூஜைக்கு வந்தவர்களின் வரிசையில் நாங்களும் நின்று கொண்டு அந்த பூஜைகளில் கலந்து கொண்டோம். அதன்பின்னர், அங்கு கண்ணாடி பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த யானைத் தந்தத்தினையும் பார்வையிட்டோம். பின்னர் எனது நண்பர்களுடன் தலதாமாளிகையை சுற்றிப்பார்த்துவிட்டு அங்கு சிறிது மணித்தியாலங்கள் செலவழித்ததன் பின்னர் தலதாமாளிகை முன் வாயிலினை நோக்கி அனைவரும் நகர்ந்தோம். இரவு நேரம் என்பதினால் ஒழுங்கான வெளிச்சம் இன்மையினால் குழு புகைப்படம் ஒன்றும் அன்று எடுக்கவில்லை. பின்னர் அங்கிருந்து சிறிது தூரத்தில் அமைந்திருந்த ஒரு சாப்பாட்டுக்கடையில் இரவு உணவை முடித்துக்கொண்டு இரவு ஓய்வெடுப்பதற்காக விடுதி ஒன்றிற்கு சென்றோம்.

அங்கு சென்று நிறைவான தூக்கத்தோடு ஓர் இரவுப்பொழுதை கழித்து விட்டு சனிக்கிழமை காலையில் அனைவரும் எழுந்து இரண்டாம் நாள் பயணத்தினை தொடங்க ஆயத்தமானோம்.

காலையில் அனைவரும் குளித்துவிட்டு புதிய ஆடைகளுடன் அங்கு வந்ததால் பேரூந்தினை சுற்றிச்சுற்றியே பல புகைப்படங்களை எடுத்துக்கொண்டோம். அதில் சிறு நிமிடங்களை கழித்து விட்டு அனைவரும் பேருந்திற்குள் ஏறினோம். அங்கிருந்து மீண்டும் தலதா மாளிகையை நோக்கி சென்றோம்.

(தொடரும்...)



கோவை

# பறவை காய்ச்சல் பரவல்

கேரளாவில் பறவை காய்ச்சல் பரவல் இருப்பதால் அந்த காய்ச்சல் தமிழகத்துக்குள் பரவுவதைத் தடுக்க தமிழக-கேரள எல்லையில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. குறிப்பாக கோவை மாவட்டம் தமிழக-கேரள எல்லையில் இருப்பதால் இந்த பகுதியில் உள்ள சோதனைச்சாவடிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறது.

அதன்படி, கோவை மாவட்டத்தில் ஆனைக்கட்டி, முள்ளி, வேலந்தாவளம், வாளையாறு, மீனாட்சிபுரம், கோபாலபுரம் உட்பட 12 சோதனைச் சாவடிகளிலும் கால்நடை பராமரிப்புத்துறை குழுவினர் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் கேரளாவிலிருந்து கோவைக்கு வரும் லொறிகள் உள்ளிட்ட வாகனங்களில் சோதனை செய்த பின்னரே உள்ளே அனுமதிக்கின்றனர்.

அத்துடன், சரக்கு வாகனங்கள் மற்றும் பிற வாகனங்களில் கிருமி நாசினி தெளிக்கப்பட்ட பின்னரே கோவைக்குள் அனுமதிக்கப்படுகிறது. அதுபோன்று கேரளாவில் இருந்து பொருட்கள் ஏற்றி வந்தால் அவை என்ன பொருட்கள் என்று வாகனம் முழுவதுமாக சோதனை செய்யப்படுகிறது.

வெற்றிடமாக லொறியோ அல்லது சரக்கு வாகனங்களோ வந்தால் அந்த வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்டது என்ன? கேரளாவில் எந்த பகுதியில் இருந்து வருகிறது? தற்போது எந்த பகுதிக்கு செல்கிறது? அதற்கான ஆவணங்கள் ஏதும் இருக்கிறதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கோவை

# 11 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு

இந்தியாவின் மணிப்பூரில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் துப்பாக்கிச்சூடு நடந்ததன் எதிரொலியாக 11 வாக்குச்சாவடிகளில் திங்கட்கிழமை (22) மறுவாக்குப்பதிவு நடைபெறுகிறது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் மணிப்பூர் உள்ளிட்ட 21 மாநிலங்களில் உள்ள 102 மக்களவை தொகுதிகளுக்கு வெள்ளிக்கிழமை (19) வாக்குப்பதிவு நடைபெற்றது.

இதில் மணிப்பூரில் உள்ள 2 மக்களவை தொகுதிக்கு தேர்தல் நடந்தது. இதில் மணிப்பூரில் 68 சதவீத வாக்குகள் பதிவானது.

அப்போது கிழக்கு இம்பால் மாவட்டத்தின் மொய்ரங்காம்பு சாஜேப் பகுதியில் உள்ள வாக்குச்சாவடி அருகே மர்ம நபர்கள் சிலர் திடீரென துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டன நிலையில் ஒருவர் காயம் அடைந்ததோடு வாக்குப்பதிவு இயந்திரங்களும் சேதப்படுத்தப்பட்டன. இதையடுத்து, மறு வாக்குப்பதிவு நடத்த வேண்டும் என காங்கிரஸ் கட்சி கோரிக்கை எழுப்பியது.

கோவை

# கனடாவில் 400 கி.கி தங்கம் கொள்ளை



சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் இருந்து எயார் கனடா விமானம் மூலம் கன்டெய்னர் ஒன்று பியர்சன் சர்வதேச விமான நிலையத்துக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி கொண்டுவரப்பட்டது.

அதில், 400 கிலோ கிராம் தூய தங்க கட்டிகளும், 2.5 மில்லியன் கனடா டொலரும் இருந்தன. விமான நிலையத்தின் சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இந்த கன்டெய்னர் போலி ஆவணம் மூலம் அன்றைய தினமே திருடப்பட்டது. இதுதொடர்பாக, பொலிஸார் நடத்திய விசாரணையில் இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இருவரும் அடங்குகின்றனர். கனடாவில் இதுவரை இல்லாத வகையில் நடைபெற்ற இந்த மிகப்பெரிய கொள்ளை சம்பவம் குறித்து பொலிஸார் ஓராண்டு நீண்ட விசாரணைக்குப் பிறகு 7 பேரை கைது செய்துள்ளனர்.

மாலே

# மாலத்தீவில் வாக்குப்பதிவு



மாலத்தீவின் 20ஆவது பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க ஞாயிறுக்கிழமை (21) வாக்குப்பதிவு நடைபெற்றது. மார்ச் 17ஆம் திகதி தேர்தலை நடத்த முதலில் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர், தேர்தல் திகதியில் மாற்றம் செய்யப்பட்டது.

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாக பாராளுமன்றத்தில் பெப்ரவரி 28ஆம் திகதி மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவுக்கு ஜனாதிபதி முகமது முய்சு ஒப்புதல் அளித்த பின்னர், தேர்தல் திகதி ஏப்ரல் மாதத்திற்கு மாற்றப்பட்டது. அதன்படி ஞாயிற்றுக்கிழமை(21) காலையில் வாக்குப்பதிவு தொடங்கியது.

93 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடத்தப்படுகிறது.

ஜனாதிபதி முகமது முய்சுவின் செயல்பாடுகளால் அண்டை நாடான இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்தத் தேர்தல் அவரது செல்வாக்கை நிரூபிப்பதற்கான முக்கிய சோதனையாக பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, “இந்திய இராணுவத்தை வெளியேற்றுவோம்” என்ற முழக்கத்துடன் வெற்றி பெற்று ஜனாதிபதி ஆனவர் முகமது முய்சு.

# ஐ.பி.எல்: டெல்லியை வீழ்த்திய ஹைதரபாத்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் சனிக்கிழமை (20) நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத் உடனான போட்டியில் புதுடெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லியின் அணித்தலைவர் றிஷப் பண்ட், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதரபாத், ட்ரெவிஸ் ஹெட்டின் 89 (32), அபிஷேக் ஷர்மாவின் 46 (12), ஷபாஸ் அஹ்மட்டின் ஆட்டமிழக்காத 59 (29), நிதிஷ் குமார் ரெட்டின்யின் 37 (27) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அக்ஸர் பட்டேல் 4-0-29-1, குல்தீப் யாதவ் 4-0-55-4 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 267 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி ஜேக் பிறேஸர்-மக்குர்க்கின் 65 (18), அபிஷேக் பொறெல்லின் 42 (22), பிறித்திவி ஷோவின் 16 (05) ஓட்டங்களோடு போராடியபோது, 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, 199 ஓட்டங்களையே பெற்று 67 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் தங்கராசு நடராஜன் 4-1-19-4, நிதிஷ் குமார் ரெட்டி 2.1-0-17-2, புவ்னேஷ்வர் குமார் 4-0-33-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஹெட் தெரிவானார்.

இந்நிலையில், ஜெய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.





அம்பாறை மாவட்ட பூப்பந்தாட்டத் தொடர்:

# வெற்றிவாகை சூடிய காரைதீவு பிரதேச செயலகம்

வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்ட விளையாட்டு விழாவின் பெண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில் காரைதீவு பிரதேச செயலக அணி சம்பியனாகி வெற்றிவாகை சூடியது.

இறுதிப் போட்டியில் அம்பாறை பிரதேச செயலக அணியை வென்றே காரைதீவு பிரதேச செயலக அணி சம்பியனானது.



இறக்குவானை ஷண் ஷைன் வி.க தொடர்

# சம்பியனான சுப்பர் லெவண்

சிவா ஸ்ரீதரராவ்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இற்க்குவானை ஷண் ஷைன் விளையாட்டுக் கழகத்தால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட மென்பந்தாட்டத் தொடரில் சுப்பர் லெவண் கிரிக்கெட் கழகம் சம்பியனானது.




சரீப் அலி கால்பந்தாட்டத் தொடர்:

# ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி வசமான கிண்ணம்

எச்.எம்.எம்.பர்ஸான்

ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக் கழகம் நடத்திய மர்ஹூம் ஷரீப் அலி ஆசிரியர் ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரில் சம்பியனாகி ஏறாவூர் இளந்தாரகை (வை.எஸ்.எஸ்.சி) அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

ஓட்டாமவடி அமீர் அலி மைதானத்தில் மின்னொளியில் அண்மையில் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 27 அணிகள் கலந்து கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு லைட் ஹவுஸ் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றே இளந்தாரகை சம்பியனானது.

சம்பியனான இளந்தாரகைக்கு 50,000 ரூபாய் பணப் பரிசும், இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட லைட் ஹவுஸ் அணிக்கு கிண்ணமும் 20,000 ரூபாய் பணப்பரிசும், மூன்றாமிடத்தைப் பெற்ற ஏறாவூர் லக்கி ஸ்டாருக்கு கிண்ணமும் 10,000 ரூபாய் பணப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டன.




# நியூசிலாந்தை சுருட்டிய பாகிஸ்தான்

நியூசிலாந்துக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு-ஸ்ரீ20 சர்வதேசப் போட்டித் தொடரில், ராவல்பின்டியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

நியூசிலாந்து: 90/10 (18.1 ஓவ. ) (பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 3/13 [3.1], மொஹமட் ஆமிர் 2/13 [3], அப்ரார் அஹ்மட் 2/15 [4], ஷடாப் கான் 2/15 [3], நசீம் ஷா 1/27 [4], இஃப்திஹார் அஹ்மட் 0/7 [1])

பாகிஸ்தான்: 92/3 (12.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் ஆ.இ 45 (34) ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் லிஸ்டர் 1/10

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 22 ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.